DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 38/2024 Crime No. 132/2024 Station Bhavani

| Name | PW-3 அம்சா | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 16.04.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

நான் பவானி ராணா நகரில் குடியிருந்து கொண்டு கட்டபை தைக்கும் தொழில் செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த ஒரு வருடம் ஒரு மாதத்திற்கு முன்பு சுமார் இரவு 07.00 மணியளவில் நான் மெயின் ரோட்டிற்கு செல்வதற்காக என் வீட்டின் முன்பு உள்ள சாலையில் நடந்து வந்துகொண்டிருந்தபோது, அ.சா.1 வேலாமாள் எனக்கு எதிர் திசையில் வந்து கொண்டிருந்தார். அப்போது, ஆஜர் 1ம் எதிரி அ.சா.1ன் கழுதிலிருந்த சங்கலியை கழட்டிக்கொண்டு ஓடினார். நானும் அ.சா.1ம் பின்னால் சத்தம் போட்டுக்கொண்டு வேகமாக ஓடினோம். 1ம் எதிரி வேகமாக ஓடிச் சென்று மெயின் ரோட்டில் நின்றிருந்த பைக்கில் ஏறி சென்றுவிட்டார். பின்னர், அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்ததார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கூறுகிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனக்கு தெரிந்த நபர் என்றால் சரியல்ல அவர் யார் என்று தெரியாது. அ.சா.1ன் பெயரை எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் காவல்துறையினர் விசாரிக்கும்போது தெரிந்துகொண்டேன். சம்பவம் நடந்ததாகவும், அதை நான் பார்த்ததாகவும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றம் வந்தபோது, போலீசார் எதிரியை அடையாளம் காட்டியதால்தான் நான் இப்போது எதிரியை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரி செயினை பறித்து செல்லும்போது, நானும் பின்னாடியே ஓடினேன். சம்பவம் நடந்த இடம் பொதுஜன நடமாட்டம் அதிகமாக இருக்கும் இடம் என்றாலும், அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் ஊர் மக்கள் அவர்களை பிடிக்க முயற்சி செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல சம்பவயிடம் சிறிய சந்து. சம்பவயிடத்தில் இருபக்கமும் கடைகள் இருக்கும் என்றால் அன்று ஞாயிற்றுக் கிழமை கடைகள் முடப்பட்டிருந்தது. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.